**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110227

1. District : மாவட்டம் Nilgiris | PS: காவல்நிலையம் V & AC | Year ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ எண் 02/21 | Date: நாள் 22.07.2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7, 7 (A), 13
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Cr.P.C | Sections பிரிவுகள்: 102
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் - | Date to : நாள் வரை 20.07.2021
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை prior to 19.00hrs. on 20.07.2021
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.07.2021 | Time : நேரம் 10.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — | Time : நேரம் -

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Taluk office, Kotagiri about 28 Km East.
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் H. Prakash | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் PA to Asst. Collector. Coonor | (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. Tmt. S. Dhanalakshmi, HQ DT, 2. Tmt. K. Jayanthi, Zonal DT 3. Tr. M. Gopinath, RI, Nedugula, 4. Tr. S. Balasubramanian, VAO, Kotagiri-I village 5. Tr. M. Kamal, VAO, Allimayar & Kallampalayam. 6. Tr. R. Pradeep Kumar, VAO, Jakkanarai. 7. Tr. N. Yuvaraj, VAO, Konavakkarai-I, village 8. Tr. J. Dhinu (PI) Hosatti Taluk office, Kotagiri.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 22.07.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் மு. கீதாலட்சுமி
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
உ.த.க பிரிவு
நீலகிரி மாவட்டம்.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**<u>ஊ.த.க.பிரிவு கு.எண்.2/2021/AC/NI வழக்கின் முதல் தகவல் அறிக்கை:-</u>**

**கனம் உதவி அமர்வு நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

இன்று 22.07.2021 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம் B.கீதாலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், குன்னூர் உதவி ஆட்சியர் அலுவலகம், குன்னூர் உதவி ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொறுப்பு) மாவட்ட ஆய்வு குழு அலுவலர் திரு.H.பிரகாஷ் அவர்கள் நிலையம் ஆஜராகி புகார் மனு ஒன்றினை கொடுத்தார். அந்த புகார் மனு விவரம் பின்வருமாறு: அனுப்புநர் H.பிரகாஷ், குன்னூர் உதவி ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர், உதவி ஆட்சியர் அலுவலகம், குன்னூர், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். அம்மையீர், பார்வை: 1) நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை எண்.Pdl.A1.No.30/2021 நாள்: 20.07.2021. நீலகிரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) ஆகிய நான், 20.07.2021-ம் தேதி கோத்தகிரியில் உள்ள தாலுகா அலுவலகத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவர்கள், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் தாலுகா அலுவலகத்திற்கு கூட்டுறவு வங்கியின் மூலம் விவசாய கடன் பெற அனுபோகச்சான்று மற்றும் பிற சான்றுகள் பெற வரும் பொதுமக்களிடம் கையூட்டாக பணம் கேட்டுப் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடைப்படையில், நான் நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் அவ்வலுவலகத்தை 20.07.2021 ஆம் தேதி இரவு 19.00 மணிமுதல் 23.30 மணிவரை திடீர் தணிக்கை மேற்கொண்டோம். இந்த திடீர் தணிக்கையின்போது வட்டாட்சியர் அலுவலக பொதுபிரிவிலிருந்த துணை வட்டாட்சியர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் ஒருவரிடமிருந்து தகுந்த முகாந்திரம் கூறாத பணம் ரூ.42.690/-ஐ 1)திருமதி.ஜெயந்தி, மண்டல துணை வட்டாட்சியர், 2)திருமதி.தனலட்சுமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், 3)திரு.கோபிநாத், வருவாய் ஆய்வாளர் நெடுகுளா,

Geethalakshmi
22/7/21

4) திரு.பாலசுப்ரமணியன், கிராம நிர்வாக அலுவலர் கோத்தகிரி-1, 5) திரு.கமல்-கிராம நிர்வாக அலுவலர் அல்லிமாயார் மற்றும் கல்லம்பாளையம், 6) திரு.பிரதீப்குமார்-கிராம நிர்வாக அலுவலர், ஜக்கனாரை, 7) திரு.யுவராஜ்-கிராம நிர்வாக அலுவலர் கொணவக்கொரை-1 மற்றும் 8) ஓரசோலை கிராமத்தைச் சேர்ந்த திரு.தினு ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது. மேலும் இந்த திடீர் தணிக்கையின் போது 1) கோத்தகிரி தாலுகா வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட UDP (Un Disbursement Register Taluk Office Kotagiri 2021 - பக்க எண்.1 முதல் 405) பதிவேட்டின் பக்க எண்.189, 2) கோத்தகிரி தாலுகா வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட Main Cash Book-ல் (பக்க எண்.1 முதல் 400 வரை) உபயோகப்படுத்தப்பட்ட பக்கங்கள் 1 முதல் 8 வரை. மேற்படி குறிப்படப்பட்ட இரண்டு பதிவேடுகளிலும் 15.07.2021 வரை மட்டுமே குறிப்புகள் எழுதப்பட்டுள்ளது. 3) கோத்தகிரி வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட கொடிநாள் பதிவெடு, 4) கோத்தகிரி வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட வெள்ள நிவாரண தொகை பதிவேடு 2020 அ5 இருக்கை வட்டாட்சியர் அலுவலகம் கோத்தகிரி பதிவேடு ஆகியவைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இந்த திடீர் தணிக்கையின் போது தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.S.தனலட்சுமி அவர்கள் இருந்த அறையின் பீரோவிலிருந்து எடுத்து அரசின் வெள்ள நிவாரண நிதி ரூ1,62,000/-ஐ ஆஜர் செய்தார். அந்த தொகைக்கான கணக்கை அலுவலக பதிவேட்டில் ஆய்வு செய்தபோது, கடந்த 10.06.2021 ஆம் தேதி பாரத ஸ்டேட் வங்கி கோத்தகிரி கிளையிலிருந்து பணம் ரூ.2,00,000/- வெள்ள நிவாரண நிதியாக பெறப்பட்டு பணப்பதிவேட்டில் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.38,000/-ஐ பற்றி கேட்டபோது கீழ்கோத்தகிரி வருவாய் ஆய்வாளர் அவர்களுக்கு கொடுத்ததாக தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.S.தனலட்சுமி கூறினார். பணம் ரூ.38,000/- வருவாய் ஆய்வாளருக்கு கொடுத்ததற்கான குறிப்புகள் ஏதும் கொடுப்படா பதிவேட்டில் பதியவில்லை. இந்த திடீர் தணிக்கையின் போது அரசு பணம் ரூ.38,000/- குறைவாக இருந்தது. இந்த திடீர் தணிக்கை சம்மந்தமாக செயல்முறை ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்த செயல்முறையினையும், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.42,690/- மற்றும் விசாரணைக்காக

Geethalakshmi
22/7/21

கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை தங்களிடம் இன்று (22.07.2021) ஆஜர் செய்கிறேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம். H.பிரகாஷ் 22.07.2021. Submitted Received the above typed complaint on 22.07.2021 at 10.30 hrs and registered a case in The Nilgiris Detachment Cr.No.2/2021/AC/NI u/s 102 Cr.PC r/w 7, 7(A) and 13 of PC Act 1988 amended as PC (Amendment) Act 2018. ஒப்பம் கீதாலட்சுமி 22/7/2021 Inspector of Police, Vigilance and Anti - Corruption, The Nilgiris. செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு: Proceedings of the Surprise Check conducted on 20.07.2021 between 19.00 hrs and 23.30 hrs at Taluk Office Kotagiri, the Nilgiris District. முன்னிலை: 1) திரு.H.பிரகாஷ், குன்னூர் உதவி ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர், உதவி ஆட்சியர் அலுவலகம், குன்னூர், நீலகிரி மாவட்டம். 2) திருமதி.B.கீதாலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். இன்று 20.07.2021-ஆம் தேதி நீலகிரி மாவட்டம், குன்னூர், உதவி ஆட்சியர் அலுவலகம், உதவி ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர், பொறுப்பு மாவட்ட மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம் திரு.H.பிரகாஷ், ஆகிய நான், மாவட்ட ஆய்வுக்குழு பணியை பார்த்து வரும்போது இன்று நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் உள்ள தாலுகா அலுவலகத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் தாலுகா அலுவலகத்திற்கு கூட்டுறவு வங்கியின் மூலம் விவசாய கடன் பெற அனுபோகச்சான்று பெற வரும் பொதுமக்களிடம் கையூட்டாக பணம் கேட்டுப் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் பேரில் கோத்தகிரி தாலுகா அலுவலகத்தை நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் 19.00 மணிக்கு திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. கோத்தகிரி தாலுகா அலுவலகம் மூன்று தளங்களை கொண்டது, முதல் தளத்தில் குற்றவியல் நீதிமன்றம், தாலுகா அலுவலக பதிவு அறை மற்றும் மறு நில அளவை பிரிவு ஆகிய அலுவலகங்கள் உள்ளது. இரண்டாவது தளத்தில் படிக்கட்டு வழியாக மேலே வரும்போது முதலில் அரசு

B.Geethalakshmi
22/7/21

வழக்குறைஞர் அலுவலகம் உள்ளது. வலது புறத்தில் வட்டாட்சியர் அலுவலக பொது பிரிவும், இடது புறத்தில் தேர்தல் பிரிவு துணை வட்டாட்சியர் அலுவலகம், வட்ட வழங்கல் துணை வட்டாட்சியர் அலுவலகம், சமூக பாதுகாப்பு அலுவலகம், நில அளவை பிரிவு ஆகிய அலுவலகங்கள் உள்ளன. மூன்றாவது தளத்தில் கூட்டங்கள் நடத்தும் அறையும், புள்ளியல் துறை அலுவலகம், இ-சேவை மையம், ஆதார் மையம், மறு நில அளவை பிரிவு அலுவலகம் மற்றும் தேர்தல் பிரிவு அலுவலக பதிவறை ஆகிய அலுவலகங்கள் உள்ளன. இரண்டாவது தளத்தில் உள்ள வட்டாட்சியர் அலுவலக பொதுபிரிவில் நுழைந்தவுடன் வலதுபுறத்தில் வட்டாட்சியர் அறை இருந்தது அந்த அறையில் தெற்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் வட்டாட்சியர் திரு.சீனிவாசன் என்பவர் அமர்ந்திருந்தார். அவரிடம் மாவட்ட தணிக்கை அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் தங்களை அறிமுகம் படுத்திக்கொண்டு இந்த திடீர் தணிக்கைக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொண்டனர். அவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்ட் பின்பக்க பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.2,510/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவரிடம் விசாரிக்க தான் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு (16.07.2021) தான் குன்னூர் தாலுகா அலுவலகத்திலிருந்து பணிமாறுதலில் கோத்தகிரி தாலுகா அலுவலகத்தில் பணியில் சேர்ந்ததாகவும் பணம் ரூ.2,510/-ஐ தனது செலவிற்காக வைத்திருந்ததாகவும் கூறியதால், விசாரணைக்கு பிறகு அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவருடைய அறையின் எதிரே கிழக்கு பார்த்தவாறு இருந்த கேபீன்களில் முதல் கேபினின் கதவிற்கு மேலே மண்டல துணை வட்டாட்சியர் என்று எழுதப்பட்ட கேபீனிள் உள்ளே தெற்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த மண்டல துணை வட்டாட்சியர் திருமதி.K.ஜெயந்தி அவர்களை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தனது மணிபர்ஸிலிருந்து பணம் ரூ.13,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க, அவர் சரியான முகாந்திரம் கூறாதல் அந்த பணம் கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக உள்ள கேபீனின் கதவிற்கு மேலே தலைமையிடத்து துணை வட்டாட்சியர் என்று எழுதப்பட்ட கேபீனின் உள்ளே கிழக்கு

22/7/21

பார்த்தவாறு அமர்ந்திருந்த திருமதி.S.தனலட்சுமி என்பவர் அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தான் இருந்த அறையிலிருந்த பீரோவிலிருந்து பணம் 10,970/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க அவர் மௌனமாக இருந்ததாலும், சரியான முகாந்திரம் கூறாததாலும், அனுபோகச் சான்று வழங்க விவசாயிகளிடம் பெறப்பட்ட கையூட்டு பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பெயரில் அந்த பணம் ரூ.10,970/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது பீரோவிலிருந்து கொடிநாள் ரசீது பணம் ரூ.2,500/- ஆஜர் செய்தார். அந்த பணத்திற்குண்டான பதிவேட்டை சரிபார்க்க சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. வெள்ள நிவாரண நிதி ரூ.1,62,000/-ஐ பீரோவிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்திற்குண்டான கணக்கு விவரங்களை கேட்க அவர் ரூ.2,00,000/-ஐ கடந்த 10.06.2021 ஆம் தேதி பாரத ஸ்டேட் வங்கி, கோத்தகிரி கிளையிலிருந்து பெறப்பட்டு பணப்பதிவேட்டில் கையிருப்பு வைக்கப்பட்டது. மீதி தொகை ரூ.38,000/-ஐ கீழ்கோத்தகிரி வருவாய் ஆய்வாளர் அவர்களுக்கு கொடுத்ததாக கூறினார். பணம் ரூ.38,000/- கொடுத்ததற்கான எந்த குறிப்பும் அலுவலக பதிவேடுகளில் இல்லை. தலைமையிடத்து துணை வட்டாட்சியர் கேபீனை ஒட்டியிருந்த கேபீனில் இருந்த இருக்கையில் கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த இளநிலை வருவாய் ஆய்வாளர் திரு.P.ராஜகோபால் என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து அவருடைய சட்டையின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.40/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்பதால் பணம் ரூ.40/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக இருந்த கேபீனின் இருக்கை காலியிடமாக உள்ளது. அதற்கு அடுத்தபடியாக இருந்த கேபீனில் இருந்த இருக்கையில் கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த இளநிலை வருவாய் உதவியாளர் திரு.S.சிவராமன் என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து அவருடைய சட்டையின் இடதுபுற பாக்கெட்டில் பணம் ரூ.330/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி அவருடைய சொந்த ஊர் தென்காசி என்பதால் சாப்பாட்டு செலவிற்காக வைத்திருந்த பணம் என்பதால் அந்த பணம் ரூ.330/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதற்கு அடுத்தாக இருந்த இடம் காலியிடமாக

Sangeethalakshmi
22/7/21

உள்ளது. அதற்கு அடுத்ததாக தெற்கு பார்த்தவாறு இருந்த முதல் கேபீனில் இருந்த இளநிலை வருவாய் உதவியாளர் விடுப்பில் சென்றார். அதற்கு அடுத்தபடியாக இருந்த கேபீனிள் இருந்த இருக்கையில் தெற்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த இளநிலை வருவாய் உதவியாளர் திரு.G.தனசேகர் என்பவரை தணிக்கை செய்ய, அவர் தானாக முன்வந்து தன்னுடைய சட்டையின் இடதுபுற பாக்கெட்டில் பணம் ரூ.1,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் தன்னுடைய சொந்த ஊர் கிருஷ்ணகிரி என்பதாலும் தான் கோத்தகிரியில் வாடகை வீட்டில் இருப்பதால் வீட்டு செலவிற்காக வைத்திருந்த பணம் என்று விசாரணையில் தெரிந்ததால், அந்த பணம் ரூ.1,000/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக இருந்த கேபீனிள் இருந்த இளநிலை வருவாய் உதவியாளர் விடுப்பில் சென்றார். அதற்கு அடுத்ததாக இருந்த கேபீனிள் தெற்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த இளநிலை வருவாய் உதவியாளர் திருமதி.K.கனிமொழி என்பவரை தணிக்கை செய்ய, அவரிடம் எந்த பணமும் இருக்கவில்லை. வட்டாட்சியர் அலுவலக மூன்றாவது தளத்தில் கோத்தகிரி தாலுகாவைச் சேர்ந்த அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் அம்மா இன்ஸ்யூரன்ஸ் திட்டம் தொடர்பாக கூட்டம் நடந்து முடிந்து வட்டாட்சியர் அலுவலக பொதுபிரிவில் இருந்த கோத்தகிரி-3 கிராம நிர்வாக அலுவலர் திருமதி.K.ஜெயசுதா என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து அவர் தன்னுடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.530/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி விசாரிக்க அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்றதால் பணம் ரூ.530/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அல்லிமாயார் மற்றும் கல்லம்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் திரு.M.கமல் என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து அவருடைய பேண்டின் பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.1290/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால் அந்த பணம் ரூ.1,290/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக நெடுகுளா கிராம நிர்வாக அலுவலர் திருமதி.K.திலகவதி என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து அவருடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.1,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க அவர்

22/7/21

தன்னுடைய நான்கு சக்கர வாகனத்திற்கு எரிபொருள் நிரப்ப வைத்திருப்பதாக கூறியதால், விசாரணைக்கு பிறகு அந்த பணம் ரூ.1,000/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக கோத்தகிரி-1 கிராம நிர்வாக அலுவலர் திரு.S.பாலசுப்ரமணியன் என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பேண்டின் பின்புற பாக்கெட்டிலிருந்து பர்ஸிலிருந்து பணம் ரூ.680/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால் அந்த பணம் ரூ.680/- கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக இருந்த நடுஹட்டி-1 கிராம நிர்வாக அலுவலர் திரு.K.கருப்புசாமி என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து அவருடைய தன்னுடைய பேண்டின் பின்புற பாக்கெட்டின் பர்ஸிலிருந்து பணம் ரூ.1,100/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க அவர் தனியாக இருப்பதால், கைசெலவிற்காக வைத்திருந்த பணம் என்று விசாரணையில் தெரிந்ததால், அந்த பணம் ரூ.1,100/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த கோத்தகிரி-3 கிராம நிர்வாக அலுவலர் உதவியாளர் திரு.T.ராமமூர்த்தி என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பேண்டின் பின்புற பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.1,350/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அது அவருடைய சொந்த பணம் என்றதால் பணம் ரூ.1,350/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த ஜக்கனாரை கிராம நிர்வாக அலுவலர் திரு.R.பிரதீப்குமார் என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பேண்டின் பின்புற பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.3,700/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால் அந்த பணம் ரூ.3,700/- கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக இருந்த திரு.J.தினு என்பரை விசாரிக்க தான் ஜெகதளா-2 கிராம நிர்வாக அலுவலர் உதவியாளர் திரு.விக்னேஷ் என்பவரிடம் தற்காலிக பணியாளராக இருப்பதாகவும், அவர் தானாக முன்வந்து தன்னுடைய சட்டையின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.4,790/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க,

D.M.Geethalakshmi
22/7/21

அவர் சரியான முகாந்திரம் கூறாததால் அந்த பணம் கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பணம் ரூ.4,790/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக இருந்த கொணவக்கொரை-1 கிராம நிர்வாக அலுவலர் திரு.N.யுவராஜ் என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.5,410/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால் அந்த பணம் கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக இருந்த கோடநாடு கிராம நிர்வாக அலுவலர் திருமதி.M.சத்தியா என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.4,600/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க அவர் தன்னுடைய மகனின் அறுவை சிகிச்சைக்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால், விசாரணைக்கு பிறகு அந்த பணம் ரூ.4,600/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த நெடுகுளா வருவாய் ஆய்வாளர் திரு.கோபிநாத் என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.2,850/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால் அந்த பணம் கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்டது. 1) இந்த திடீர் தணிக்கையின் போது சரியான முகாந்திரம் கூறாத பணம் ரூ.42,690/- 2) கோத்தகிரி தாலுகா வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட UDP (Un Disbursement Register Taluk Office Kotagiri 2021 - பக்க எண்.1 முதல் 405) பதிவேட்டின் பக்க எண்.189, 3) கோத்தகிரி தாலுகா வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட Main Cash Book-ல் (பக்க எண்.1 முதல் 400 வரை) உபயோகப்படுத்தப்பட்ட பக்கங்கள் 1 முதல் 8 வரை. மேற்படி குறிப்படப்பட்ட இரண்டு பதிவேடுகளிலும் 15.07.2021 வரை மட்டுமே குறிப்புகள் எழுதப்பட்டுள்ளது. 4) கோத்தகிரி வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட கொடிநாள் பதிவெடு, 5) கோத்தகிரி வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட வெள்ள நிவாரண தொகை பதிவேடு 2020 அ5 இருக்கை வட்டாட்சியர் அலுவலகம் கோத்தகிரி பதிவேடு ஆகியவைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மண்டல

Geethalakshmi
22/7/21

துணை வட்டாட்சியர் கேபீனுக்கு சேர்ந்தவாரு இருந்த கணினி அறையில் எந்த அலுவலரும் இருக்கவில்லை. இந்த திடீர் தணிக்கையானது 20.07.2021 ஆம் தேதி 19.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது கோத்தகிரி வட்டாட்சியர் அலுவலக அலுவர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டனர். இந்த திடீர் தணிக்கையின் செயல்முறையின் போது கோத்தகிரி வட்டாட்சியர் திரு.K.சீனிவாசன் உடனிருந்தார். இந்த திடீர் தணிக்கை செயல்முறையில் திரு.H.பிரகாஷ், குன்னூர் உதவி ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர், உதவி ஆட்சியர் அலுவலகம், குன்னூர், நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டாட்சியர் திரு.K.சீனிவாசன், காவல் ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி, திரு.பாலசுப்ரமணியன், கிராம நிர்வாக அலுவலர், கோத்தகிரி-1, திரு.கோபிநாத், நெடுகுளா வருவாய் ஆய்வாளர், திரு.யுவராஜ், கிராம நிர்வாக அலுவலர், கொணவக்கரை, திரு.பிரதீப்குமார், கிராம நிர்வாக அலுவலர், ஜக்கனாரை, திருமதி.ஜெயந்தி, மண்டல துணை வட்டாட்சியர், திரு.கமல், கிராம நிர்வாக அலுவலர், அல்லிமாயார் மற்றும் கல்லம்பாளையம், திரு.தினு, ஒரசோலை கிராமம், திருமதி.தனலட்சுமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ஆகியோர் கையொப்பம் செய்தனர். இந்த திடீர் தணிக்கை செயல்முறையானது தலைமைகாவலர் திரு.நா.சக்தி என்பவர் லேப்டாபில் தட்டச்சு செய்தார். நான் மேற்கண்ட புகாரினையும், செயல்முறை ஆணையினையும் இன்று 22.07.2021-ம் தேதி காலை 10.30 மணிக்கு பெற்று, உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2021/AC/NI சட்ட பிரிவு 102 Cr.PC r/w Sec 7, 7(A) and 13 PC Act 1988 Amended as PC (Amendment) Act, 2018-ன் படி வழக்கு பதிவு செய்து, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரு.42,690/- (ரூபாய் நாற்பத்தியிரண்டாயிரத்து அறநூற்று தொண்ணூறு மட்டும்) ஆகியவற்றை கணம் உதவி அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் அவர்களுக்கு சமர்பித்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

Geethalakshmi
22/7/21
காவல் ஆய்வாளர்
ஊ.த.க பிரிவு, நீலகிரி மாவட்டம்.